பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 204

வியாழக்கிழமை
19 ஜூன் 2025

ஆனி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு

யாழ்., ஜூன் 19
யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் முதியவர் ஒருவர் அழுகிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

# மனித உரிமை விடயத்தில் மிகச் சிறிய முன்னேற்றமே!

## இலங்கை அரசாங்கத்தின் மீது இணையனுசரணை நாடுகள் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 19
மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் மிகச்சிறிய முன்னேற்றத்தையே வெளிப்படுத்தியுள்ளது என்று இணையனுசரணை நாடுகள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன. 11

## வலி.தெற்கு சபையிலும் தமிழரசு வலுவான நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 19
வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும் என்று கருதப்படுகின்றது. 31 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் முதலாவது அமர்வு, வடமாகாண உள்ளூராட்சி உதவி 11

## காரைநகர் பிரதேசசபையில் சுயேச்சை ஆட்சியமைக்கும்

### நேற்று எட்டப்பட்டது உடன்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19
காரைநகர் பிரதேசசபை அமர்வு இன்று இடம்பெறவுள்ள நிலையில், இன்றையதினம் சுயேச்சைக் கட்சியினர் ஆட்சியமைப்பார்கள் என்று தெரியவருகின்றது. காரைநகர் பிரதேசசபையின் 11



ப்ரச்சந்தி புரளி

'நக்கிற ஆமிக்கு சென்றிப்பொயின்ரென்ன பஸ்ஸென்ன? எல்லாம் ஒண்டுதான் கண்டியளோ'

மாணவி மீது

## ஓடும் பேருந்தில் வைத்து பாலியல் துன்புறுத்தல்!

### படைச் சிப்பாய் கைது

மன்னார், ஜூன் 19
மன்னார் மடுப் பிரதேசத்திலிருந்து முருங்கன் பகுதியில் உள்ள பாடசாலைக்கு அரச பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்த மாணவிக்கு பாலியல் துன்புறுத்தல் வழங்கிய குற்றச்சாட்டில் சிப்பாய் ஒருவர் 11

## வலி.மேற்கில் தமிழரசுக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 19
வலிகாமம் மேற்குப் பிரதேசசபையில் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும் என்று தெரியவருகின்றது. 11

முள்ளிவாய்க்கால் சூத்திரதாரிகளுடன் இணைந்து

## நரித்தனமான ஆட்சியே யாழில் இடம்பெறுகிறது

### அமைச்சர் சந்திரசேகர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 19
முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்பினருடன் இணைந்து, அந்த அழிவுகளை ஆதரித்த டக்ளஸ் தேவானந்தா போன்றோருடன் கூட்டுச் சேர்ந்து, நரித்தனமான ஆட்சியை சிலர் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கின்றனர் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற 11

## ஆட்சி அமைத்த தரப்புகள்

## வலிகாமம் வடக்கை வளைத்தது தமிழரசு

### தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன்



யாழ்ப்பாணம், ஜூன் 19
வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியமைத்துள்ளது. அந்தக் கட்சியின் தவிசாளராக 10

தமிழரசின் உறுப்பினர்

## வாக்களிப்பில் நடுநிலை கட்சியால் இடைநீக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் நேற்றைய அமர்வின் போது, கட்சியின் முடிவுக்கு மாறாகச் செயற்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உறுப்பினர், உடனடியாக நடை 10

## வல்வெட்டி நகரசபை; பேரவைக்கு ஆட்சி!

### தவிசாளராக தவமலர் சுரேந்திரநாதன்



யாழ்ப்பாணம், ஜூன் 19
வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவை நேற்று ஆட்சியமைத்துள்ளது. அந்தச் சபையில் தவிசாளராக அகில இலங்கைத் 11

காலைவாரிய கறுப்பாடுகள்

## வலி.கிழக்கில் கவிழ்ந்தது வீடு

### பரபரப்பான வாக்களிப்பில் தவிசாளரானார் நிரோஷ்



யாழ்ப்பாணம், ஜூன் 19
வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் நேற்றைய அமர்வில், தமிழரசுக் கட்சி அல்லது தமிழரசுக் கட்சியைச் சார்ந்த கூட்டணியின் உறுப் 11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## வலி.கிழக்கில் மட்டுமே திசைகாட்டி வேட்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 19
உள்ளூராட்சிசபைகளில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் மட்டுமே இதுவரை தேசிய மக்கள் சக்தியினர் வேட்பாளரைக் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனங்களை வென்ற தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4106 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 25 45 64 68 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹனை ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1173 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 15 20 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0132 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 7 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2212 |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 22 64 74 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5864 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 0 0 6 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1894 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 40 51 73 78 |
| விசேட எழுத்து | Y |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0439 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 6 9 |

# தெல்லிப்பழைப்பிரதேசத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்

## *சீரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை*

**யாழ்ப்பாணம், ஜூன் 19**

**தெல்லிப்பழைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைகளைப் பாதுகாப்பான புகையிரதக்கடவைகளாக சீரமைத்துத் தருமாறு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இதன்போது கருத்துத் தெரிவித்த அதிகாரிகள்,

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர்பிரிவில் உள்ள ஜே/213 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள செல்லத்துரை வீதியில் சமிக்ஞை விளக்கு மாத்திரம் காணப்படுகின்றது. சுமார் 500 முதல் 550 பயணிகள் வரை இந்த வீதியைப் பயன்படுத்துகிறார்கள். ஜே/227 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கோயில் குளம் வீதியில் 1000 முதல் 1500 பயணிகள் வரை வீதியைப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் புகையிரதக்கடவைக்கு சமிக்ஞையும் பாதுகாப்புக்கடவையும் இல்லை. ஜே /234 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சந்தை வீதியில் காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்குரிய பாதுகாப்புக்கடவை சமிக்ஞை இல்லை. ஜே / 235 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள குருவீதியில் காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்குரித்தான ரயில் கடவையை 200 முதல் 225 வரையான பயணிகள் பயன்படுத்துகின்றனர். இதில் சமிக்ஞை விளக்குள்ள பொழுதிலும் பாதுகாப்புக்கடவை இல்லை. ஜே /236 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாவிட்டபுரம் மயிலிட்டி வீதியில் அமைந்துள்ள மாவிட்டபுரம் புகையிரத நிலையத்துக்குரிய ரயில் கடவையை 500 முதல் 600 வரையான பயணிகள் பயன்படுத்தும்நிலையில் சமிக்ஞை விளக்கு மாத்திரமே உள்ளது. ஆனால் பாதுகாப்புக்கடவை காணப்படவில்லை. ஜே /237 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள பொன்னுசீமா வீதியிலுள்ள ரயில் கடவை 100 முதல் 125 பயணிகள் வரை பயன்படுத்துகின்றனர். சமிக்ஞை விளக்குள்ள பொழுதிலும் பாதுகாப்புக் கடவை இல்லை.

இதுவரை இந்தக் கடவைகளில் 4 விபத்துகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஓர் உயிரிழப்பும் பதிவாகியுள்ளது. இவை குறித்து விரைந்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர். (ச-125)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0572 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 0 7 3 8 2 3 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2838 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 11 44 52 61 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 24 59 70 79 |
| வெற்றி வாரம் | 4999 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 17 29 46 48 |
| சீட்டிழுப்பு வாரம் | 4550 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 09 29 42 74 |
| வெற்றி வாரம் | 2014 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 08 32 38 71 |
| வெற்றி வாரம் | 2664 |

| JAYODA DLB | |
|---|---|
| திகதி | 18.06.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 08 16 40 43 |
| வெற்றி வாரம் | 2136 |

*பலாலி*

# வீதிப்பாவனை நேரம் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் - பலாலி வீதி இனிவரும் நாள்களில் இரவு 7 மணிவரை போக்குவரத்துக்காகத் திறந்திருக்கும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை குறித்த வீதியில் பயணம் செய்வதற்கு தற்போது அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு காரணங்களால் அந்த நேரத்தை இரவு 7 மணிவரை நீடிக்கவேண்டும் என்று பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கையைத் தொடர்ந்து, இந்த விடயம் ஜனாதிபதி அநுரவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இதையடுத்தே, இரவு 7 மணிவரை வீதியைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-26)

# மஹிந்தவை விரட்டுவதற்கு அரசாங்கம் தயங்குவது ஏன்?

## *சாமர சம்பத் எம்.பி. கேள்வி*

கொழும்பு, ஜூன் 19



மஹிந்த ராஜபக்சவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து விரட்டுவதற்கு அரசாங்கம் ஏன் தயங்குகின்றது? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் கூறிய எதையும் செய்யவில்லை, கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் அப்படியே உள்ளன. மஹிந்த ராஜபக்சவை இன்னமும் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து அகற்றமுடியவில்லை. வீட்டிலிருந்து வெளியேறவேண்டும் என்று அரசாங்கம் மஹிந்தவிடம் கூறுகின்றது. மஹிந்த ராஜபக்ச கடிதம் கேட்கின்றார். அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயங்குகின்றது.

மக்களைச் சந்தோசப்படுத்துவதற்காக அரசாங்கம் அவ்வப்போது எதையாவது கூறுகின்றதே தவிர எதையும் செய்யவில்லை - என்றார். (எ-75)

# வவுனியா மாநகர முதல்வர் பொறுப்பேற்றார் கடமைகளை!

வவுனியா, ஜூன் 19

வவுனியா மாநகர முதல்வர் மற்றும் பிரதிமுதல்வர் ஆகியோர் நேற்றுக் காலை கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றனர்.

வவுனியா மாநகரசபையின் முதல்வர்,பிரதி முதல்வர் தெரிவு அண்மையில் இடம்பெற்றிருந்தது.

முதல்வராக சுந்தரலிங்கம் காண்டீபன், பிரதி முதல்வராக பரமேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் உத்தியோகபூர்வமாக நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

நிகழ்வில் சமயத்தலைவர்கள், பொதுமக்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-110)

# பஸ் - லொறி விபத்து 23 பேர் படுகாயம்

இரத்தினபுரி - கொழும்பு பிரதான வீதியின் மீன்னான பகுதியில் பேருந்தும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் 23 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுக் காலை நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்த சுமார் 23 பேரும் எஹெலியகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள னர். விபத்து குறித்து எஹெலியகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஐந்து ஆண்டுக்குள் யாழில் சர்வதேசப் போட்டிகள்

அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 19**

**யாழ்ப்பாணத்தில் சர்வதேச மைதானம் அமைப்பதற்குரிய நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் சர்வதேசரீதியான போட்டிகள் அங்கு நடக்கும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டை 76 வருடங்கள் ஆண்டவர்கள், அவர்களுடன் கரம் கோர்த்திருந்தவர்கள் தமிழர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள் இது தொடர்பாகச் சிந்திக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் மற்றும் அங்கு வாழும் இளைஞர்களின் விளையாட்டு ஆற்றலை இனங்காண்பதற்கு கடந்தகாலங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை. இன்று யாழில் சர்வதேச விளையாட்டு மைதானம் வரப்போகின்றது. எமது ஐந்து ஆண்டு காலப்பகுதிக்குள் அங்கு முதலாவது சர்வதேசப் போட்டிகூட நடைபெறும்.

யாழ்ப்பாணத்துக்குரிய உள்ளக விளையாட்டரங்கினை சர்வதேச தரத்தில் அமைப்பதற்குரிய நடவடிக்கையும் இடம்பெறும். அதற்குரிய இடமும் அடையாளம் காணப்பட்டுள்ளது-என்றார். (எ-44,26)

காரைநகரில்

## கரையொதுங்கும் பிளாஸ்ரிக் துகள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணம் காரைநகரிலும் பிளாஸ்ரிக் துகள்கள் கரையொதுங்குகின்றன என்று கடற்படையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவ முன்னாயத்த குழு கூட்டத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட பதில் செயலர், "யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதுவரை பிளாஸ்ரிக் துகள்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் தற்போது காரைநகரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கு தெரிவித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ச- 125)

## யாழில் கடும் காற்றால் 12 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

பலத்த காற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தில் 12பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, வேலணை, உடுவில் ஆகிய பகுதிகளில் இந்த அனர்த்தம் பாதிவாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-27)

## பூஸா சிறையில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூன் 19

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐந்து கைதிகள் நேற்றுப் புதன்கிழமை காலை சிறைச்சாலையின் கூரை மீது ஏறி நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கைதிகள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-இ)

## தெஹ்ரானிலிருந்து வெளியேறிய இலங்கைத் தூதரகம்

கொழும்பு, ஜூன் 19

ஈரான் தலைநகர் தெஹ்ரானின் உக்கிர தாக்குதல் இடம்பெற்றுவருவதால் இலங்கை தூதரக அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இஸ்ரேலில் நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானில் உள்ள இலங்கை தூதரகத்தை இன்று (நேற்று முன்தினம்) அகற்றினோம். தெஹ்ரான்மீது தாக்குதல் தொடர்வதால் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதிகாரிகள் மற்றும் தூதரகத்தில் தஞ்சமடைந்த 8 மாணவர்கள் ஈரானின் வடக்கு பிரதேசம் நோக்கி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-44)



## 'எயா தன் லொக்கு லமயெக்' இலவசத் திரைப்படக் காட்சி

காலமான சிறந்த நடிகை மாலினி பொன்சேகாவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அவர் நடித்த 'எயா தன் லொக்கு லமயெக்' (அவள் இப்போது பெரியபிள்ளை) சிங்களத் திரைப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்படவுள்ளது. எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு, 18/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இந்தத் திரைப்படம் திரையிடப்படும். 1975 ஆம் ஆண்டு, 9 ஆவது மொஸ்கோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இந்தத் திரைப்படத்தின் நெறியாளர், புகழ்பெற்ற தர்மசேன பத்திராஜ ஆவார். யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் தனது மாதாந்த இலவசத் திரையிடலாக இதனை ஒழுங்குசெய்துள்ளது. (ச)




## இல்லாத ஊருக்கு வழி

இல்லாத ஊருக்கு வழிகாட்டுறதில முந்தின அரசாங்கங்கள் மாதிரி திசைகாட்டிக்காரரும் கடும் விண்ணர்கள் தான். ஆனால் இப்பிடிப் பேய்க்காட்டுறதில இவைக்கு இன்னும் அனுபவம் பத்தாது எண்டதால, திசைகாட்டிக்காரர் விடுற புருடா எல்லாம் டக்குடக்கெண்டு வெளியில வந்து முகத்தில கரியைப் பூசுதாம். இப்பிடித்தான் நாலைஞ்சு நாளைக்கு முதல் திசைகாட்டிக்காரர் ஒரு அறிவிப்பைவிட்டவை. "பலாலியில இருக்கிற ராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயிலுக்கு இனிமேல் ஆரும் எப்பவும் போய் கும்பிட்டுட்டு வரலாம், ஆமியிட்டையோ வேற ஆரிட்டையுமோ எந்தப் பெர்மிசனும் எடுக்கத் தேவையில்லை" இதுதான் அந்த அறிவிப்பு. வெறும் அறிவிப்போட நிக்காமல், முழுவியளமா திசைகாட்டி எம்.பி.மார் வேட்டி சால்வையோட அந்தக் கோயிலுக்குப் போய், கும்பிட்டு, படமெடுத்து அதை மீடியாக்களுக்கும் குடுத்தவை.

இவ்வளவுகாலமும் முன்னுக்கு நிக்கிற ஆமியிட்ட பெர்மிசன் எடுத்து, ஐடெண்டி கார்ட் பதிஞ்சு, ஆமியின்ர வாகனத்திலதான் சனங்கள் போய்வந்தவை. "அந்த அரியண்டத்துக்கு ஒரு விடிவுகாலம் வந்திட்டுது. இனி எங்கட அம்மாளாச்சியை நாங்கள் நினைச்சநேரம் போய்க் கும்பிட்டு வரலாம்" எண்டு அங்கத்தைச் சனத்துக்கும் கடும் புளுகம். அந்தப் புளுகத்தோட கொஞ்சப்பேர் அம்மனுக்குப் பொங்கிப் பூசை செய்துபோட்டு வரலாமெண்டு தடல்புடலா வெளிக்கிட்டிருக்கினம். தங்கடபாட்டில கோயில் பக்கமாப் போனவையை சென்றியில நிண்ட ஆமிக்காரர் மறிச்சு "எங்க போறியள்?"எண்டு கேட்டிருக்கிறாங்கள். இவையளும் "அம்மன் கோயிலுக்கு" எண்டு சொல்லியிருக்கினம். "அம்மன் கோயிலுக்குப் போறதுக்கு பெர்மிசன் எடுத்து, ஐசி பதிஞ்சு போகனும் எண்டு தெரியாதா?" எண்டு கடுமையான குரலில கேக்க " இப்ப அதொண்டும் தேவையில்லை, எல்லாம் திறந்துவிட்டாச்செண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்கே" எண்டு அவையும் அப்பாவித்தனமாச் சொல்லியிருக்கினம். அதைகேட்டதும் ஆமிக்காரருக்கு கடும் கோபமாம்.

"ஒண்டும் தெரியாது. அதுக்கெல்லாம் கனக்க வேலை இருக்கு. முதல்ல பாதை போடோனும். அந்த வேலையே இன்னும் முடியேலை. அரசியல்வாதிமார் சும்மா சொல்லுறதையெல்லாம் நம்பாதீங்க" எண்டு ஆமிக்காரர் அட்வைஸ் சொல்லிப்போட்டு, கோயிலுக்குப் போன ஆக்களை அப்பிடியே திருப்பி அனுப்பிட்டாங்களாம். சனங்களும் அதோட விடேலே. உடனேயே தங்களுக்குத் தெரிஞ்ச திசைகாட்டிக்காரரிட்ட இதைப்பற்றிச் சொல்லி இருக்கினம். "எங்களுக்கும் வடிவாத் தெரியாது. எதுக்கும் மேலிடத்தில விசாரிக்கிறம்" எண்டு திசைகாட்டிக்காரர் போனை வைச்சிட்டினமாம். இப்பிடி தாங்கள் படம் காட்டுறதுக்காக சும்மா வாய்க்கு வந்ததையெல்லாம் திசைகாட்டிக்காரர் அடிச்சுவிடுறதால, சனமெல்லோ ஆத்துலைஞ்சு அவலப்படுதுகள். சரியா வழிகாட்ட வேண்டிய திசைகாட்டியே இப்பிடி பிழையா வழிகாட்டினால் சனங்களும் என்னதான் செய்ய ஏலும்?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். வெளியூரில் அமைந்திருக்கும் பிரசித்திபெற்ற கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். தாய்வழி உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவுகிடைப்பது மகிழ்ச்சிதரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியைச் செய்துகொடுப்பீர்கள்.

**கடகம்:** பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால்பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கன்னி:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும். பிற்பகலுக்குமேல் உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். அரசாங்க அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். கணவன் மனைவிக்கிடையேஅந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சிதரும். அதேநேரம் திடீர்ச்செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காடவைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாகமுடியும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்ப் பயணம் தவிர்க்கவும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்குவாய்ப்பு உண்டு. சிலருக்குநவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும். சிலருக்கு தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.




# ஹேய்லீஸ் அவென்டுரா பொலநறுவையில் புதிய எடை அளத்தல் தீர்வுகள் மையத்துடன் தனது இருப்பை விரிவுபடுத்துகிறது

உலகத்தரம் வாய்ந்த தொழிற்றுறைத் தீர்வுகளை இலங்கை முழுவதும் வழங்குவதில் அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் ஒரு நடவடிக்கையில், ஹேய்லீஸ் அவென்டுரா (Hayleys Aventura) அதன் சமீபத்திய ஏவரி வே ட்ரோனிக்ஸ் (Avery Weigh Trniox) விற்பனை மற்றும் சேவை மையத்தை எண் 125, மட்டக்களப்பு வீதி, பொலநறுவையில் நிறுவியது.

இந்தப் புதிய வசதியானது வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வணிகங்களுக்கு ஒரு முக்கிய மையமாக செயற்பட அமைக்கப்பட்டுள்ளது, இது எடை அளத்தல் தீர்வுகள் குறித்த விரிவான பட்டியலை வழங்குகிறது.

இந்த மூலோபாய விரிவாக்கம் ஹெய்லிஸ் குழுமத்தின் தொழிற்றுறைத் தீர்வுகள் பிரிவான ஹேய்லீஸ் அவென்டுராவுக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது, ஏனெனில் இது பிராந்தியத்தில் அதன் இருப்பை வலுப்படுத்துகிறது. புதிய மையத்தினூடாக உயர் துல்லியமான ஆய்வக நிலுவைகள் மற்றும் மேடை அளவீடுகள் முதல் வலுவான எடையுள்ள உபகரணங்கள், கேட்டரிங் தொழில் உட்பட விவசாயம், தளபாடங்கள், உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தொழில்களுக்கும் உபகரணம் விற்கப்படுகிறது.

ஏவரி (Avery), ஏ.என்.டி (ANd) மற்றும் சி.ஏ.எஸ் (CAS); போன்ற சர்வதேச அளவில் புகழ்பெற்ற நாமங்களைக் கொண்ட பொலநறுவை மையம் அதிநவீன தொழில்நுட்பத்தையும் நம்பகமான தரத்தையும் பிராந்திய நிறுவனங்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவருகிறது. ஒரு நுட்பமான மருந்து அளவீடாக இருந்தாலும் அல்லது பெரிய அளவிலான சரக்குகளை எடைபோட்டாலும், ஹேய்லீஸ் அவென்டுரா பெரிய தீர்வுகளை, இணையற்ற துல்லியம் மற்றும் நம்பகத்தன்மையுடன் வழங்குகிறது.

ஏவரி வே ட்ரோனிக்ஸ் ( Avery Weigh Trniox) மூலம் இலங்கையில் 95 ஆண்டுகாலப் பாரம்பரியத்துடன், நிறுவனம் ஒப்பிடமுடியாத தொழில் நிபுணத்துவம், சான்றளிக்கப்பட்ட அளவுத்திருத்தசேவைகள் மற்றும் நம்பகமான விற்பனை ஆதரவு ஆகியவை வழங்கப்பட்டுள்ளதோடு, இது தீர்வுகளை எடைபோடுவதில் நாட்டின் மிகவும் நம்பகமான பங்காளியாக அதன் நிலையை மேலும் உறுதிப்படுத்துகிறது.

'இந்த விரிவாக்கம் ஒரு புதிய இருப்பிடத்தைவிட அதிகமாகப் பிரதிபலிக்கிறது, இது பிராந்தியத்தில் உள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு வாக்குறுதியாகும்' என்று ஹேய்லீஸ் அவென்டுராவின் செய்தித் தொடர்பாளர் கூறினார். 'புதுமையான மற்றும் நம்பகமான தொழில்நுட்பங்களுடன் வணிகங்களை ஆதரிப்பதற்கும், ஒவ்வொரு செயற்பாட்டிலும் துல்லியம் மற்றும் செயற்றிறனை உறுதிசெய்வதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்'.

பொலநறுவை மையத்தின் ஆரம்பமானது இலங்கையின் ஒவ்வொரு மூலையிலும் உலகளாவிய தொழிற்றுறை தரங்களைக் கொண்டுவருவதற்கும், முன்னேற்றம், துல்லியம் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் ஹேய்லீஸ் அவென்டுரா கொண்டுள்ள பணி நோக்கத்தை அடிக்கோடிட்டுக்காட்டுகிறது.

## நயினாதீவு உற்சவகாலத்தின்போது சட்டவிரோதச் செயல்களைத் தடுக்கவும்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவு ஆலய மஹோற்சவ காலத்தின்போது அதிகளவான மதுபான போத்தல்கள் நயினாதீவுக்கு எடுத்து செல்லபடுவதாக யாழ். மாவட்டச் செயலகக் கூட்டத்தில் சுட்டிக்காட்டபட்ட நிலையில் இதுகுறித்து கடும் கட்டுபாட்டு நடவடிக்கைகளைப் பிரயோகிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நயினாதீவு ஆலய மஹோற்சவ முன்னாயத்தக் கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. உற்சவ காலத்தில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். ஆன்மீக தலமாகிய நயினாதீவுக்கு தனிநபர் ஒருவர் கொண்டுசெல்லக்கூடிய மதுபானம் தவிர்ந்த மேலதிக சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தடுக்கும்முகமாக மதுவரித் திணைக்களத்தினர் கடமைபுரிய வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலா் குறிப்பிட்டார். (ச-125)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

பளை நரசிங்கை வைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு சிறப்பு பூசைகளுடன் ஆரம்பமாகி சங்காபிஷேகம் இடம்பெறும்.

தொடர்ந்து சுவாமி பூந்தண்டிகையில் மாலை வீதிவலம் வருவார். (ச-17)

## ஹெரோய்னுடன் ஏழாலையில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 19

ஏழாலையில் இளைஞர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார். புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 74 மில்லிகிராம் ஹெரோயினுடன் 27 வயதான இளைஞரைக் கைது செய்தனர். குறித்த இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல்செய்ய மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நலவார்த்தை

உங்கள் கனவுகளை நினைவில் வைத்துக்கொண்டு அவற்றிற்காகப் போராடுங்கள்.

– பௌலோ கொய்லோ –

## சர்வதேசத்தின் தோல்வி!

'மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் சிறீலங்கா அரசாங்கம் மிகச் சிறிய முன்னேற்றத்தை மட்டுமே பதிவு செய்துள்ளது. அத்துடன், அரசாங்கத்தால் நீக்கப்படுவதாக வாக்குறுதி வழங்கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் கவனத்திற்கொண்டுள்ளோம்' என்று இணைத்தலைமை நாடுகள் அறிக்கையிட்டுள்ளன. இலங்கையில் நிலவும் தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் போக்கை தற்போதைய அரசாங்கம் முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வொன்று நடைபெறவுள்ளநிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் இன்னும் சில தினங்களில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள பின்னணியில், இணைத்தலைமை நாடுகளிடமிருந்து இந்த அறிக்கை வெளிப்பட்டுள்ளது. ஆனால், இந்த விடயங்களை இதற்கு முன்னர் இணைத்தலைமை நாடுகள் கவனத்திற்கொள்ளவில்லையா? இலங்கைக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைப்பது இத்துடன் எத்தனையாவது தடவை? உள்ளிட்ட கேள்விகளை கேட்கவேண்டியே இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனித்த காலம்முதல் இலங்கை அரசாங்கத்துக்கு எச்சரிக்கையையும், அறிவுறுத்தலையும், அவகாசத்தையும்தான் இணைத்தலைமை நாடுகள் வழங்கி வருகின்றனவே தவிர, உருப்படியாக ஒரு செங்கல்லைக்கூட அசைக்கவில்லை. இலங்கையில் இன்று நிலவும் தண்டனையற்ற போக்குக்கும், மனித உரிமைகள்நிலைநாட்டப்படாத தன்மைக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டம் தக்கவைக்கப்பட்டமைக்கும் இலங்கை அரசாங்கம் எவ்வளவுக்கெவ்வளவு காரணமோ அவ்வளவுக்கவ்வளவு மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு நடத்தும் இணைத்தலைமை நாடுகளும் காரணம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உச்சக்கட்ட செயற்பாடுகளே 'வெறும் அறிக்கையிடல் தான்' என்றமைந்து மிக நீண்டகாலமாயிற்று. உண்மையில் அந்த உயர்சபையின் வினைத்திறன் அற்ற தன்மையும், அதிகாரம் இல்லாத வெற்றுக்கதிரைகளும், தண்டனை விலக்களிக்கும் அல்லது தாமதப்படுத்தும் போக்கும்தான் இலங்கையில் மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளில் பல போர்க்குற்றவாளிகள் ஒய்யாரமாக உலாவருவதற்குக் காரணம். எனவே, இலங்கையில் தண்டனைகளில் இருந்து விலகும் அல்லது விடுவிக்கப்படும் போக்குக் காணப்படுகின்றது என்று கூறாமல், போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டதா அல்லது அதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டனவா? என்ற பரிசீலனையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், அதன் தீர்மானங்களுக்கு இணைத்தலைமை வழங்கும் நாடுகளும் செய்துகொள்ளவேண்டும்.

முள்ளிவாய்க்காலில் என்ன நடந்ததோ அதைவிட மோசமான மனிதப் பேரவலம் இன்று காஸாவில் நிகழ்கின்றது. முள்ளிவாய்க்கால் படுகொலையாளிகளை சர்வதேசம் தண்டித்திருந்தால், இன்று காஸாவில் கேட்கும் மனித ஓலத்தின் கனதி குறைந்திருக்க வாய்ப்புகள் அதிகம். எனவே, அன்று நடந்த படுகொலைகளுக்கு மட்டுமல்ல, இன்று நடப்பவைக்கும் எதிர்காலத்தில் நடக்கப் போகின்ற படுகொலைகளுக்கும்கூட இணைத் தலைமை நாடுகளின் பங்களிப்பு மிகப்பெரிது.






## 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தை பாடசாலைகளுக்கு விஸ்தரிக்குக

### பிரதமர் ஆலோசனை

**கொழும்பு, ஜூன் 19**

**ஒவ்வொரு அதிபரும் தமது பாடசாலையில் 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தை முழு நாட்டுக்கும் முன்னுதாரணமாக நடைமுறைப்படுத்தவேண்டும். எமது நாட்டிலுள்ள அனைவரினதும் வாழ்க்கைமுறையாக இந்தத்திட்டம் மாறவேண்டும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

'கிளீன் சிறீலங்கா' திட்டத்தின் அதிகாரிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'க்ளின் சிறீலங்கா' என்பது வெறுமனே சுத்தம் செய்வது மட்டுமல்ல. நாம் வாழும் சூழலை, நமது சிந்தனை முறை, அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளுடன் சேர்த்து தூய்மையாக வைத்திருப்பது பற்றியதாகும்.

எமது எதிர்கால சந்ததியினரைக் குறிப்பாக மாணவர் சமூகத்துக்கு அதனைப் பழக்கப்படுத்தவேண்டும்.

அத்துடன் இந்தத் திட்டத்தை பாடசாலைகளுக்கு அப்பால் தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் கொண்டு செல்லவேண்டும். இது ஒரு தனி நபரையோ அல்லது ஒரு குழுவையோ இலக்காகக்கொண்டு நடத்தப்படும் தற்காலிகத்திட்டம் அல்ல. முழு நாட்டையும் இலக்காகக்கொண்டு இடம்பெறும் தேசிய திட்டத்தின் ஆரம்பகட்டமாகும் - என்றார். (ச-26)

## குடும்பத்தோடு கூண்டினுள் கெஹெலிய

கொழும்பு, ஜூன் 19

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சொத்துகள் மீதான விசாரணைகளின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெஹலிய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்றுக் காலை அழைக்கப்பட்டு, அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் குறித்த கைது இடம்பெற்றுள்ளது. (ச-இ)

## மாவனெல்ல பிரதேசசபை ஐ.ம.ச. வசம்

கொழும்பு, ஜூன் 19

கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல பிரதேசசபையின் அதிகாரத்தையும் அதன் தலைவர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

அதன்படி, கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல பிரதேசசபையின் புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் புட்டுல உடகம மாவனெல்ல தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## புதிய பாடத்திட்டம்

கொழும்பு, ஜூன் 19

2026 ஆம் ஆண்டு முதல் தரம் 1 முதல் 6 ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதே வேளை 2028ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புக்கான புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றும், அதனடிப்படையில் 2029ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



## தே.ம.சக்தியிடம் நுவரெலியா மாநகராட்சி

கொழும்பு, ஜூன் 19

நுவரெலியா மாநகராட்சி மேயராக தேசிய மக்கள் சக்தியின் உபாலி வணிக சேகர தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் சிவன்ஜோதி யோகராஜா சபையின் பிரதி மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில் மீட்கப்பட்ட என்புகள்

# சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம்



### ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூன் 19

**யாழ்ப்பாணம் செம்மணி மனிதப்புதைகுழியில் அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக் கூடுகளை வைத்துப் பார்க்கும்போது சிறுவர்கள், பெண்கள் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது. இந்த அகழ்வாய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதுடன், அகழ்வாய்வுகளில் வெளிப்படைத்தன்மை அவசியமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் ஆடைகளற்ற நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனவே இந்தச்சடலங்கள்நிர்வாணமாகப்புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. திட்டமிட்டவகையில் படுகொலைகள் செய்யப்பட்ட பின்னர் சடலங்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது.

மேலும் செம்மணிப்பகுதியில் புதைகுழிகள் உள்ள விடயம் கடந்த 1999 ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்ட 6 இராணுவத்தினருக்கு ட்ரயல் அட் பார் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது. இதில் பிரதான சந்தேகநபரான இராணுவ லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன நீதிமன்றத் தீர்ப்பையடுத்து, செம்மணிப்பகுதியில் இராணுவத்தினரால் 600பேர் வரையில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளதாக தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

எனவே, இந்தப் புதைகுழி அகழ்வுக்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இதற்கான சகல ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் வழங்க வேண்டும். அகழ்வுச்செயற்பாட்டை நிறுத்தாது இதனை முழுமைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-26,246)

## எரிபொருள் வரிசைக்கு முற்றுப்புள்ளி

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த இருநாள்களாக யாழ்ப்பாண மாவட்டத்தின் எரிபொருள் நிலையங்களில் காணப்பட்ட நீண்டவரிசை நேற்றையதினம் இல்லாமற்போயுள் ளது.

தேவையான எரிபொருள் சீராக வழங்கப்பட்டுவருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு இலட்சத்து 15 ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவை எனக் கணிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு 2 இலட்சத்து 64 ஆயிரம் லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது.

நேற்று எரிபொருள் நிலையங்களுக்கு வட பிராந்திய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 2 இலட்சத்து 50 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். (ச-125,20,17)

## பிளாஸ்ரிக் துகள்களை அகற்ற துரிதமான நடவடிக்கை

### மாவட்ட கடல்சார் அதிகாரசபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாண மாவட்டக் கடற்கரைப் பிரதேசங்களில் கரையொதுங்கும் பிளாஸ்டிக் துகள்கள் பிரிகையடைந்து அவற்றை கடல்வாழ் உயிரினங்கள் உட்கொள்ளமுன் விரைவாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 500 கிலோ துகள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர் கேசவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம். எஸ் .சி.எல்.ஆர் 3 எனும் கப்பல் கேரள கடற்பரப்பில் மூழ்கியுள்ளது. அந்தக் கப்பலில் பிளாஸ்ரிக் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் இருந்துள்ளன. அவை தென்மேற்குப் பருவக்காற்று இலங்கையைநோக்கிக் காணப்படுவதால் வடக்கு மற்றும் வடமேற்குக் கடற்பரப்பிலும் கரையொதுங்க ஆரம்பித்துள்ளன.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை நான்காவது நாளாகவும் அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதன்மையாகப் பாதிக்கப்பட்ட இடமாக நெடுந்தீவு காணப்படுகின்றது. நயினாதீவு, குறிகாட்டுவான், புங்குடுதீவு என 40 கிலோமீற்றர் வரையான கடற்பரப்புப் பாதிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பிரதேசங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. பிளாஸ்ரிக் மூலப்பொருள் துகள்களால் நேரடி ஆபத்தில்லாதபோதும், மறைமுகமான ஆபத்துகள் உள்ளன. அவை உப்புநீரில் அல்லது சூரியஒளியால் பிரிகையடைந்து பிளாஸ்டிக் துகள்களாக மாற்றமடையக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. அவற்றை கடல்வாழ் உயிரினங்கள் உட்கொள்ளக்கூடும். நாம் கடல் உணவுகளை உட்கொள்ளும்போது சுகாதார ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தும். பிளாஸ்டிக் மூலப்பொருள் துகள்களால் நுண் பிளாஸ்டிக் துகள்களாக மாற முன்னர் அவற்றை அகற்றவேண்டும். இதுவரை 500 கிலோகிராம் வரை அகற்றியுள்ளோம் - என்றார். (ச-125)

## மனைவியுடன் ஐஸ் விற்பனை; பருத்தித்துறையில் சிக்கிய நபர்

### இளைஞர்கள் குறிவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

பருத்தித்துறையைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு மனைவி மற்றும் அறிமுகமானவர்களின் உதவியுடன் ஐஸ் மற்றும் கேரளக் கஞ்சா ஆகிய போதைப்பொருள்களைப் பெருமளவில் விநியோகித்துவந்த போதைப் பொருள் வியாபாரி ஒருவர் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் ஊழல் சோதனைப் பிரிவால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

பருத்தித்துறை, கட்கோவளத்தில் வசிக்கும் 29 வயது சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து சுமார் 12 கிராம் 40 மில்லிகிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டன.

குறித்த இளைஞர் சமூகத்தை குறிவைத்து செயற்பட்டு போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்டுவந்தாரென விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-100,23)

## பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 6 வயதுப் பாலகி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 19

பாதுகாப்பற்ற கிணற்றினுள் வீழ்ந்து 6 வயதுச் சிறுமி யொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் சாவகச்சேரியில் நேற்றுமுன் தினம் மாலை நடந்துள்ளது.

கண்டி - அக்குராணையில் இருந்து சாவகச்சேரியில் உள்ள உறவினரின் வீட்டுக்கு வருகைதந்திருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தவறிவீழ்ந்த சிறுமி உறவினர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது வழியில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-28)



### சுற்றுலாவை ஊக்குவிக்க

## யாழ்.இளைஞர்களால் வினோத சுற்றுப்பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முகமாக யாழ். மாவட்டத்திலிருந்து மூன்று இளைஞர்கள் சுற்றுலாப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

ஹைஏஸ் ஒன்றை வீடாக மாற்றி அதில் அத்தியவசியமான தேவைகளை உள்ளடக்கி இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுலாப் பயணமானது 120 நாள்கள் கொண்டதாக அமைந்துள்ளதுடன், குறித்த இளைஞர்கள் 25 மாவட்டங்களுக்கும் சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரசித்திபெற்ற இடங்களை இனங்காட்டவுள்ளனர். நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து இந்தச் சுற்றுலாப் பயணத்தை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்துவை விசாரிக்கும்குழு தினமும் கூடும்

தேசபந்து தென்னக்கோன் மீதான அதிகாரத் துஷ்பிரயோ கக் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு நேற்றுமுன்தினம் முதல் விசாரணை முடியும்வரை தினமும் கூடுவதற்குத் தீர்மானித்துள்ளது. (எ-இ)


## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை.

உணவு, தங்குமிட வசதி இலவசம்.

தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி

077 810 6857, 0759742495,
021 226 5551

www.valvaieldershome.com

(CS/58611) J-1


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 25 . 03 . 1970



மறைவு 21 . 05 . 2025

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த (21.05.2025) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### அமரர் திருமதி.கேதீஸ்வரன் கௌரி (லலிதா)

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை (20.06.2025) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

வரன் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்
077 905 0188

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 08 . 1933



மறைவு 14 . 06 . 2025

### காமாட்சிப்பிள்ளை நடராஜா

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், அராலி, கனடா Markham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட காமாட்சிப்பிள்ளை நடராஜா அவர்கள் கடந்த (14.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பிரமணியம் நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கருணாகரன் மற்றும் பரஞ்சோதிநாதன், உமாதேவி, கேசவநாதன், விசுவநாதன், மகாதேவன், பரிமளாதேவி, பூமாதேவி, கௌசலாதேவி, கிருஸ்ணபாலன் (Krish) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் தனபாக்கியம், திருநயனி, நாகராஜா, நந்தகுமாரி, விமலாதேவி, சாந்தினி, ஜெயஸ்ரீ, பாலகுமார், தர்மராஜா, ஜனார்த்தனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, கற்பகம், நவரத்தினம் மற்றும் கமலாம்பிகை, சின்னம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சுந்தரம்பிள்ளை, கந்தையா, சண்முகலிங்கம், தம்பிராசா மற்றும் தயாபராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர், நவரட்ணம், தில்லையம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், யாழினி- அனகன், யசிந்தன் - நிவேதா, யாமினி - ராஜதீபன், சாளினி- அதர்சன், சுபாஜினி- விஜயபாஸ்கர், சுபகேஸ், பிரகாஸ் - அமுதினி, பிரதாபன் - சிவமெதுரா, உமாராஜ் - லேனா, நிருபா - அலன், சஸ்கியா - ஜொகானேஸ், டினோஜா - அபிரன், டிவிஜா, சாய்ரன், றகுன் - இலக்கியா, றகுனியா, சஞ்சய், றுபிசன், றுபிசனா - யதுசன், பிரியா - அகிலன், பிரவின் - நிவேதா, அபிஷிந்த் - கஸ்தூரி, விபிஷினி - கோகுல்சாந், அஸ்வின், அஸ்மிரா, ரவின், மயூரிக்கா, சஜின் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், மீனுகா, அக்சிதா, நிதுரா, அமீரா, தாரா, ஆஷ்ரியா, நிலா, ஆதி, அஞ்சனா, அர்ஜீனா, மகாரா, லியோனாட், மாயா, சோபியா, ஏஷான், நீலா, நவீன், மீனா, நேகா, நோரா, மித்ரா, கைரோ, ஜெயன், டேவா, டியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பரஞ்சோதிநாதன்(நாதன்) | - மகன் | - +16472910448 | தனபாக்கியம் | - மருமகள் | - +41786942309 |
| கேசவநாதன்(கேசவன்) | - மகன் | - +14167250021 | நாகராஜா(இந்திரன்) | - மருமகன் | - +491781620184 |
| விசுவநாதன்(விசுவன்) | - மகன் | - +16479228350 | ஜெயஸ்ரீ | - மருமகன் | - +14169394343 |
| மகாதேவன்(தேவன்) | - மகன் | - +14166698711 | பாலகுமார்(பாலா) | - மருமகன் | - +14164514845 |
| கிருஸ்ணபாலன்(அப்பன்) | - மகன் | - +14169105324 | தர்மராஜா(தர்மா) | - மருமகன் | - +16479666563 |

(CR/45199) J-1

## நீங்கா நினைவுடன்

பிறப்பு 18 . 12 . 1954



இறப்பு 19 . 05 . 2025

கடந்த 19.05.2025 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்துரை தயாபரன்

அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் (21.06.2025) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையில் இருந்த நேரம் எமக்கு நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கொடுத்த உள்ளங்களுக்கும் எம் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் இரங்கலுரை ஆற்றியும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மேலும் சகல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்களின் குடும்பத்தினர் சார்பான நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

இல 68, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

077 123 4719
077 640 8766

(CS 58613) E-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவுகோரும் தமிழரசுக்கட்சி

மன்னார், ஜூன் 19

மன்னார் மாவட்ட மக்களின் அரசியல் சார்ந்து செயற்பட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மன்னார் மாவட்டக் கிளை தயராக உள்ளது. ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மன்னார் மாவட்டத்தில் சபை அமைக்கும் விடயத்தில் இணைந்து செயற்படுவார்கள் என்று நம்புகின்றேன் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். மன்னாரில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் 5 சபைகளுக்கான தவிசாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேசசபை தவிர மன்னார் நகரசபை, மன்னார், நானாட்டான், மாந்தை மேற்குப் பிரதேசசபைகள் உள்ளடங்களாக 4 உள்ளூராட்சிசபைகளில் போட்டியிட்டது. தேர்தலுக்கு முன்னர் அதிக ஆசனங்கள் எடுக்கும் கட்சிக்கு ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்குவது என்ற இணக்கப்பாடு இருந்தது. மன்னார் நகரசபை, மன்னார், மாந்தை மேற்குப் பிரதேசசபைகள் ஆகிய மூன்று உள்ளூராட்சிசபைகளையும் ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கைத் தமிழரசுக்கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளரை தமது கட்சிக்கு வழங்கும் பட்சத்தில் ஏனைய சபைகளில் ஆதரவு வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். இது தொடர்பாக 3 தடவைகள் பேச்சுகள் நடத்தப்பட்டன. ஆயினும் அவர்கள் இன்றுவரை தங்கள் முடிவை அறிவிக்கவில்லை.

அதிக ஆசனம்பெற்ற சபைகளில் தமிழ்க் கட்சிகள் முன்வந்து நிபந்தனையற்ற வகையில் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும். மாந்தை மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தொடர்பில் 2 வருடங்கள் தமிழரசுக்கட்சிக்கும் ஏனைய 2 வருடங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் வழங்க இலங்கைத் தமிழரசுக் கட்சி தயாராக இருக்கிறது- என்றார்.

## பெயர் மாற்றம்

சுழிபுரம் மேற்கு வறுத்தோலையில் வசிக்கும் சின்னத்தம்பி கனகசூரியம் ஆகிய நான் எனது பெயரை சின்னத்தம்பி சிவகுமார் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சின்னத்தம்பி சிவகுமார் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சின்னத்தம்பி சிவகுமார்

## பெயர்மாற்றம்

17/6 கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தை சேர்ந்த மார்க்ரெட் சூசைப்பிள்ளை ஆகிய நான் எனது பெயரை திரேசம்மா சூசைப்பிள்ளை என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் திரேசம்மா சூசைப்பிள்ளை என கையொப்பம் இடுவேன் என இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

திரேசம்மா சூசைப்பிள்ளை

(CS 586121 E)

# கொள்கலன்களில் எரிபொருள் விநியோகிக்கத் தடை

கொள்கலன்களில் எரிபொருட்களை விநியோகிக்க உடனடித்தடை விதிக்கப்படு வதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

எரிபொருள்களுக்கு செயற்கை தட்டுப்பாட்டு நிலை ஏற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனை மீறிச்செயற்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் அறிவுறுத்தியுள்ளது. (ச-100)

## பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டு வேலைக்கு ஆள் தேவை

தொடர்புகளுக்கு:
076 676 3012
076 588 8395

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் 20 . 05 . 1943



விண்ணில் 23 . 05 . 2025

கடந்த 23.05.2025 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகலிங்கம் மகேந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 20.06.2025 வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 22.06.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் ராஜா வீதி நீர்வேலி பொன் செல்வமஹால் மண்டபத்தில் மதிய போசன நிகழ்வும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக மனமுவர்ந்து ஏற்று கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர்கள் மற்றும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு
நீர்வேலி

குடும்பத்தினர்

(CR 45198) E-1

## INVITATION FOR BID 2025 /03
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

### STAMP DUTY FUND

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Provincial Council. (Stamp Duty)
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway/Buildings construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-06-19 To 2025-07.03 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, e.mail: vswps@yahoo.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.

11. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-06-19 To 2025-07-03 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-06-25 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-07-04 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(16)/ W/SD/2025/01 | Reconstruction of Unthusanthai VeethyPandaththarippu – Phase II | 3.51 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 35,100.00 | 19.09.2025 | 49 |
| NP/14/41(16)/ W/SD/2025/02 | ReconstructionPaththuppanaiyadi Road, Phase II | 2.54 | 60 | C8 or Above (Highway) | 3,500.00 | 25,500.00 | 19.09.2025 | 49 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam South west Pradeshiya Sabha,
Manipay.
19.06.2025

(CR 45302) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் சைவ கலைக்கூட கட்டுரைப்

யாழ்ப்பாணம், ஜூன் 19

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினால் வழமைபோன்று நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவினை முன்னிட்டு மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும்24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சைவம், தமிழ், பண்பாடு, கலாசார விழுமியங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி இடம்பெறவுள்ளது.

கனிஷ்ட பிரிவு தரம் 6,7,8 மாணவர்களுக்கு 100 சொற்கள், மத்திய பிரிவு தரம் 9,10,11 மாணவர்களுக்கு 150 சொற்கள், மேற்பிரிவு 12,13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 250 சொற்கள் என மூன்று பிரிவுகளாக இடம்பெறும்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டுப் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.


போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா நிகழும் 23.08.2025 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 19

அனலைதீவு அருணோதயா முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியை கு.சுஜானி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர் து.புஷ்பகாந்தன் கலந்துகொள்வார். (ச-9)




2025 ஆம் ஆண்டின் இஸ்லாமிய வங்கிக்கான விருது
வழங்கலில் ISLAMIC RETAIL BANK OF THE YEAR - ASIA
என்னும் விருதினால் இலங்கை வங்கியின் AN-NOOR பிரிவு கௌரவிக்கப்பட்டுள்ளது
என்பதை அறிவிப்பதில் நாம் பெருமிதம் அடைகிறோம்.

இவ்வெற்றியின் பங்காளர்களாக எமது வாடிக்கையாளர்கள் எமக்களித்த நம்பிக்கைக்கும் அர்ப்பணிப்புக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## நாகபூசணி அம்மன் திருவிழாக்காலத்தில் கட்டடப்பொருள் எடுத்துச்செல்லத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆல[illegible]த்தின் வருடாந்த உற்சத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 [illegible]ம் திகதி முதல் அடுத்த மாதம் 12ஆம் திகதிவரை குறி[illegible]வான் இறங்கு துறையில் இருந்து பிரதான இறங்கு[illegible]றைக்கு கட்டடப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்[illegible]டைசெய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆல[illegible]வருடாந்த உற்சவத்துக்கான முன்னாய்த்தக்கூட்டம் [illegible]ற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்[illegible] நடைபெற்றது. ஆலயத் திருவிழாக்காலங்களில் [illegible]யினாதீவுக்குக் கொண்டுசெல்லப்படுகின்ற கட்டடப்[illegible]ள்கள் காரணமாகப் பக்தர்கள் எதிர்கொள்ளும் அசெ[illegible]ரிங்கள் தொடர்பில் ஆலய அறங்காவலவர் சபையால் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வங்களாவடி இறங்குதுறையின் மூலமாகக் கட்டடப்பொருள்களைக் கொண்டுசெல்வது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டபோது, அந்த இறங்குதுறையின் தரம் தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களம் அறிக்கையிடவேண்டும் என்று வேலணைப் பிரதேச செயலர் சுட்டிக் காட்டினார். வங்களாவடி இறங்குதுறை ஊடாகக் கட்டடப்பொருள்களைக் கொண்டுசெல்வது தொடர்பில் வீதி அபிவிருத்தித் திணைக்களம், வேலணைப் பிரதேச செயலகம் இணைந்து ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று யாழ். மாவட்டப் பதில் செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார். (எ-125)

## நயினாதீவு அம்மன் ஆலய மஹோற்சவத்தையொட்டி அரைமணிநேரத்துக்கு ஒரு படகு

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை யொட்டி தினமும் காலை 6 மணிமுதல் படகுச் சேவை அரை மணத்தியாலத்துக்கு ஒருமுறை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மஹோற்சவ கால முன்னாயத்தப்பணிகள் தொடர்பான கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை பேருந்துச்சேவைகளும் இடம்பெறும் எனப் பேருந்துச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டரை மாதங்களுக்கான எரிபொருள் இருப்பிலுள்ளது!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 19**

**இரண்டரை மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் இருப்பிலுள்ளது. எனவே, பொதுமக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் இரண்டரை மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய ஒரு லட்சத்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் மேலும் 90 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் நாட்டை வந்தடையவுள்ளது.

நீண்டகால ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேலும் 4 மசகு எண்ணெய்க் கப்பல்கள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு 2 இலட்சத்து 46 ஆயிரத்து 200 மெற்றிக்தொன் 92 ஒக்ரேன் ரக பெற்றோல், 5 ஆயிரம் மெற்றிக்தொன் 95 ஒக்ரேன் ரக பெற்றோல், ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 250 மெற்றிக்தொன் ஓட்டோ டீசல், 10 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் சுப்பர் டீசல் என்பனவும் ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது நாட்டில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் எதிர் வரும் இரண்டரை மாதங்களுக்கு போதுமானது என்பதோடு, இந்த முற்பதிவுகளும் இனிவரும் நாள்களில் கிடைக்கப்பெறவுள்ளன. எனவே மக்கள் எரிபொருள்களுக்காக வரிசைகளை ஏற்படுத்தி செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் - என்றார். (ம-44)

## மணப்பெண் தேவை

- சித்தங்கேணி இந்து. கௌரவகுலம் (V). 1983. அனுஷம் London Graduated, UK citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண்தேவை.
- திருநெல்வேலி. ரோமன்கத்தோலிக். கௌரவகுலம் (V). 1982. ரேவதி Graduate, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (21418)
- திருநெல்வேலி இந்து. கௌரவகுலம் (V). 1989. அத்தம். Bsc(hons), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24452)
- காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1988. புனர்பூசம் Msc, in Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (242112)
- சண்டிலிப்பாய் ரோமன்கத்தோலிக். கௌரவகுலம் (V). 1982. Bsc, Government officer, Australia citlzen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1986. அஸ்வினி. IT Degree, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1982. அத்தம்.Masters, Canada + USA citizen Divoree மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24750)
- புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). சதயம். 1985 MSc, Software 'Engineer USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (27327)
- வன்னார் பண்ணை. இந்து. கௌரவகுலம் (V). சித்திரை. 1987. Masters, (MBA), Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). சித்திரை. 1987. Bachelor of Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce, மணப்பெண்களும், மாப்பிள்ளைகளும் உண்டு.

www. thaalee.com
S.Sharma J.P
Phone & Whatsapp
077 539 3728

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 05 . 07 . 1949



இறைவன் கரத்தில் 18 . 06 . 2025

**அமரர் அருளானந்தம் பிரான்சிஸ்**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் பிரான்சிஸ் அவர்கள் (18.06.2025) புதன்கிழமை கிறிஸ்துவிற்குள் இளைப்பாறினார்

அன்னார் காலஞ்சென்ற பிலோமினா அவர்களின் அன்புக் கணவரும் அருந்ததி, அனுஷா, நிக்ஷன் காலஞ்சென்ற விமல் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெனிஸ், றொய்ஸ், அல்வின்ஸ், டிவைன்ஸ், நிக்ஷிகா, அக்ஷயா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (19.06.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் மிருசுவில் புனித நீக்கிலார் தேவாலயத்தில் நடைபெற்று பின்னர் மிருசுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# சமஷ்டித் தீர்வைப் பெறுவதே தமிழ் மக்களின் நோக்கம்

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 19

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எம்மை நாமே ஆளக்கூடிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைவதே எமது இலக்காகும் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சமஷ்டி அடிப்படையில் தீர்வு கோருவது நாட்டை பிரிக்கும் நடவடிக்கை அல்ல. சமஷ்டி தீர்வு பற்றி தொடர்பாக இந்த ஆட்சியாளர்கள் படிக்கவேண்டும். வடக்கு, கிழக்கை பிரிப்பதற்கு பங்கு வகித்தவர்களும் ஆட்சியில் இருக்கின்றனர்.

புதிய அரசமைப்பு ஊடாகத் தீர்வு எனக் கூறப்பட்டாலும் இன்னும் முன்னேற்றகரமான நடவடிக்கை இல்லை. 30 வருடங்களாக பராமரிப்பு இல்லாமல் இருக்கும் காணிகள் காடாவது வழமை. அதை அடிப்படையாகக்கொண்டு மக்களின் காணிகளை அபகரிப்பதற்கு இடமளிக்கமுடியாது. ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் எமக்கு கிடையாது- என்றார். (எ-44)




கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோம் சிற்றி (கூட்டுறவு நகர்) மீளப்புனரமைப்புச் செய்யப்பட்டு கடந்தவாரம் திறந்துவைக்கப்பட்டது. (ச-17)

## வலிகாமம்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவானார்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் முதலாவது கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

35 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும், தமிழ்த் தேசியப் பேரவை 6 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 3 ஆசனங் களையும், ஈ.பி.டி.பி. 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்
களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

தவிசாளர் தெரிவுக்காக தமிழரசுக் கட்சியின் சார்பில் சோமசுந்தரம் சுகிர்தன், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் பத்மநாதன் சாருஜன் ஆகியோர் முன்னிறுத்தப்பட்டனர். இதில் 14:09 என்ற அடிப்படையில் சோமசுந்தரம் சுகிர்தன் வெற்றிபெற்றார். இதையடுத்து வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்தது.

தவிசாளர் தெரிவின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பில் இருந்து விலகி நடுநிலை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வலி.கிழக்கில்...

களமிறங்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மையில் முடிவடைந்த உள்ளாட்சித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியினர் எந்தவொரு சபையிலும் ஆட்சியை அமைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறவில்லை. அத்துடன், பல சபைகளில் கூட்டணி ஆட்சியையும் புறமொதுக்கி நடுநிலையாகவே இருந்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் நேற்று நடைபெற்ற வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை அமர்வில் மட்டுமே தேசிய மக்கள் சக்தியினர் வேட்பாளரை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வாக்களிப்பில்...

முறைக்கு வரும் வகையில் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் களமிறக்கப்பட்ட வேட்பாளரை ஆதரிக்காமல், நடுநிலை வகித்தமைக்காகவே அவர் கட்சியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந் திரனால் சம்மந்தப்பட்ட உறுப்பினருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் உள்ளதாவது:-

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவுகளின்போது கட்சியின் மிகத் தெளிவான அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் நடுநிலை வகித்துள்ளீர்கள். ஆகையால் உடனடியாக அமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடைநிறுத்தப்படுகின்றீர்கள். தங்களது இந்த நடவடிக்கை சம்மந்தமான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்துக்குள் எழுத்துமூலம் அறிவிக்கவேண்டும். இல்லையெனில் கொடுப்பதற்கு விளக்கம் எதுவும் இல்லை என்ற அடிப்படையிலும் அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய விளக்கமாக இல்லாவிட்டாலும் கட்சியில் இருந்தும் பிரதேசசபை உறுப்பினர் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள் - என்றுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழுகிய...

கந்தமுத்து புஸ்பராசா (வயது-80) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.
இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## மனித...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இணையனுசரணை வழங்கிய நாடுகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையில் மே மாதம் தேர்தல்கள் நடத்தப்பட்டதை நாங்கள் வரவேற்பது டன், 2009ஆம் ஆண்டு ஆயுதமோதலின்போது உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வுகள் மிக அமைதியான வகையில் இடம்பெற்றுள்ளதை நாங்கள் கவனத்திற்கொண்டுள்ளோம். எனினும், மனித உரிமைகள், பொறுப்புக் கூறல், நல்லிணக்கம், அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் சிறிதளவு முன்னேற்றத்தையே காண்பித்துள்ளது. இதனால் நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம்.
இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் தண்டனை விலக்களிக்கும் போக்குக்கு நாங்கள் தீர்வைக் காணவேண்டும்.
மேலும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூகத்தினர் சுதந்திரமாக பாதுகாப்பாக செயற்படக்கூடிய நிலையை ஏற்படுத்துமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். அனைவரையும் உள்ளடக்கிய முழுமையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.
இதற்கு, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறுவது மிகவும் முக்கியமான விடயமாகும். அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதே தனது நிலைப்பாடு எனத் தெரிவித்துள்ளபோதிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம் - என்றுள்ளது. (அ-ம-இ)

## வலி.தெற்கு...

ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் இன்று நடைபெறவுள்ளது.
இந்தச் சபையில் தமிழரசுக் கட்சிக்கு 13 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 6 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 6 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 5 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும் உள்ளன. தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகிக்கும் முடிவை எடுத்தால், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கச் சாத்தியம் அதிகம் உள்ளது. (அ-ம-26-125)

## காரைநகர்...

அமர்வு இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. 11 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 2 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக்கு 2 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 2 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 2 ஆசனங்களும், தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன. எவருக்கும் பெரும்பான்மை இல்லாத காரணத்தால், காரைநகர் பிரதேசசபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த்தேசியப் பேரவை மற்றும் சுயேச்சைக்குழு ஆகியவற்றுக்கு இடையில் ஓர் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.
அதன்பிரகாரம் காரைநகர் பிரதேசசபையின் பதவிக்காலத்தில் (நான்கு ஆண்டுகள்) முதல் 16 மாதங்களுக்கு சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த ஒருவர் தவிசாளராகவும் தமிழ் மக்கள் கூட்டணியினைச் சேர்ந்த ஒருவர் உப தவிசாளராகவும், அடுத்த 16 மாதங்கள் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர் தவிசாளராகவும் தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர் உபதவிசாளராகவும், இறுதி 16 மாதங்கள் தமிழ்த் தேசியப் பேரவையின் உறுப்பினர் தவிசாளராகவும் சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் உபதவிசாளராவும் செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேசசபையின் நிர்வாகத் தெரிவு இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

## ஓடும்...

நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். முருங்கன் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-56-213)

## வலி.மேற்கில்...

26 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 10 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 6 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 4 ஆசனங்களும், ஈ.பி.டி.பி.க்கு 2 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனமும், சுயேச்சைக்கு ஓர் ஆசனமும் கிடைத்துள்ளன.
தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகிக்கும் என்பதாலும், ஈ.பி.டி.பி. தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்று கருதப்படுவதாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியே இந்தச் சபையில் ஆட்சியமைக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. (அ-ம-26-125)

## நரித்தனமான...

விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'தோல்வியின் பிதாவாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மாறியுள்ளார். அதனால்தான் அவரின் தலைமைப் பதவிக்கு எதிராகக்கூட கட்சிக்குள் கோஷங்கள் எழுப்பப்பட்டுவருகின்றன.
தற்போது மட்டுமல்ல தேர்தலுக்கு முன்பிருந்தே தேசிய மக்கள் சக்திக்கு எதிரா சாணக்கியன் உள்ளிட்டவர்கள் போலிக் கருத்துகளைப் பரப்பிவந்தனர். அதன் மற்றுமொரு அங்கமே பிள்ளையானின் கட்சியுடன் தேசிய மக்கள் சக்தி கூட்டணி அமைக்கவுள்ளது என்று தெரிவிக்கப்பட்ட கதையாகும். தேசிய மக்கள் சக்தி, பிள்ளையானின் கட்சியுடன் கூட்டுச் சேரவில்லை. எந்தவொரு கட்சியுடனும் எமக்கு டீல் கிடையாது.
என்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சாணக்கியன் ராஜபக்சக்களுடன் கரம்கோர்த்து இருந்த நபர். முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்குக் காரணமாக இருந்தவர்களுடன் யாழில் இவர்கள் ஒன்றுசேர்ந்து வருகின்றனர். சித்து விளையாட்டுகள்மூலம் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என சாணக்கியன் போன்றவர்கள் நினைக்கலாம். ஆனால் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.
இலஞ்ச, ஊழல்களில் ஈடுபட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுவருகின்றனர். அதனால்தான் களவாணிகள் கூட்டுச் சேர்ந்து குட்டி சபைகளில் ஆட்சியமைக்க முற்படுகின்றனர் - என்றார். (அ-ம-26)

## வலி.கிழக்கில்...

பினர்கள் சிலர் இரகசிய வாக்கெடுப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் தவிசாளர் தெரிவுக்குப் பிரேரிக்கப்பட்ட தியாகராஜா நிரோஸுக்கு வாக்களித்துள்ளனர். இதையடுத்து வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது.
வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை சபா மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
36 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 11 ஆசனங்களும், தேசிய மக்கள் சக்திக்கு 9 ஆசனங்களும், தமிழ்த் தேசியப் பேரவைக்கு 5 ஆசனங்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 5 ஆசனங்களும், தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக் குழு ஒன்றிற்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக்குழு இரண்டிற்கு ஓர் ஆசனமும், ஈ.பி.டி.பி.க்கு ஓர் ஆசனமும் கிடைத்திருந்தன.

### தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்டவர்கள்

தவிசாளர் பதவிக்கான போட்டியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் செல்வத்திசைநாயகம் தவநாயகம், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் சிவசுப்பிரமணியம் சுகிர்தருபன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தியாகராஜா நிரோஸ் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.
பகிரங்க வாக்கெடுப்பின் மூலமா அல்லது இரகசிய வாக்கெடுப்பின் மூலமா தவிசாளர் தெரிவை நடத்துவது என்று உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது இலங்கை தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுயேச்சைத் தரப்பு ஆகியன இரகசிய வாக்கெடுப்பையும் கோரின. இரகசிய வாக்கெடுப்பை அதிகமானவர்கள் கோரியதால், அந்த வாக்களிப்பு முறையூடாகத் வாக்கெடுப்பை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.
வாக்கெடுப்பின்போது, தவிசாளர் பதவிக்காக ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஸ் 16 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட செல்வத்திசைநாயகம் தவநாயகம் 11 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட சிவசுப்பிரமணியம் சுகிர்தருபன் 9 வாக்குகளையும் பெற்றனர்.

### திசைமாறிய திசைகாட்டி

தவிசாளர் தெரிவின்போது முதலாம் இடத்தைப்பிடித்தவரை விடவும், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தவர்களுக்குக் கிடைத்த வாக்குகள் அதிகமாகக் காணப்பட்டதால், தேசிய மக்கள் சக்தியின் சிவசுப்பிரமணியம் சுகிர்தருபன் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு ஏனைய இருவருக்கும் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
இரண்டாவது வாக்கெடுப்பைப் பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது தேசிய மக்கள் சக்தியினர் இந்த வாக்களிப்பில் (வாக்கெடுப்புக்கான வாக்களிப்பு) இருந்து விலகி நடுநிலை வகித்த போதிலும் ஒரேயொரு உறுப்பினர் மட்டும் இரகசியமுறை வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என்று கூறினார். இதையடுத்து பகிரங்க வாக்கெடுப்புக்கும் இரகசிய வாக்கெடுப்புக்கும் சரிசமமான ஆதரவு கிடைத்தது. இதுவே சபையில் பெரும் திருப்பமாக அமைந்தது. இதையடுத்து, திருவுளச் சீட்டுமூலம் இரகசிய வாக்கெடுப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.
இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் 28 பேர் வாக்களித்ததுடன் ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டது. இதன்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் 15 வாக்குகளையும் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட செல்வத்திசைநாயகம் தவநாயகம் 12 வாக்குகளையும் பெற்றனர். தியாகராஜா நிரோஷ் தவிசாளராகத் தெரிவானார். இதையடுத்து வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சியமைத்தது.

### திருப்புமுனை

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவு இருந்ததால் அந்தக் கட்சியின் வேட்பாளருக்கு 14 வாக்குகள் கிடைத்திருக்கவேண்டும். ஆனால் 12 வாக்குகளே கிடைத்தன. இருவர் நிரோஷுக்குத் தமது ஆதரவை இரகசியமான முறையில் வழங்கியதாலேயே வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் தமிழரசுக் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பிரதி தவிசாளராக தமிழ்த் தேசியப் பேரவையின் தர்மலிங்கம் ஜனார்த்தனன் இரகசிய வாக்கெடுப்பில் தெரிவானார். (அ-ம-26)

## வல்வெட்டி...

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தவமலர் சுரேந்திரநாதன் தெரிவானார்.
வல்வெட்டித்துறை நகரசபையின் முதலாவது கூட்டம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபுவின் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.
16 ஆசனங்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த் தேசியப் பேரவை 7 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக்கட்சி 5 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.
தவிசாளர் பதவிக்காக தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தவமலர் சுரேந்திரநாதனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மகாலிங்கம் மயூரனும் போட்டியிட்டனர். இதில், 7:6 என்ற அடிப்படையில் தவமலர் சுரேந்திரநாதன் வெற்றிபெற்றார். இதையடுத்து வல்வெட்டித்துறை நகரசபையில் தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சியமைத்தது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீசாலை - அல்லாரை வீதி

## புனரமைப்புப்பணிகளை மக்களும் கண்காணிக்கலாம்

*சாவகச்சேரி நகரசபை முன்மாதிரி*

யாழ்ப்பாணம், ஜூன் 19

பொது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது வட்டார ரீதியாகப் பொது மக்களை உள்ளடக்கிய கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு நேரடி கண்காணிப்பின்கீழ்

முன்னெடுக்கப்படவேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை ஏற்று மீசாலை - அல்லாரை வீதியைப் புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மீசாலை - அல்லாரை வீதிப் புனரமைக்கப்பட்டுவருகின்றது. இந்த வீதியின் புனரமைப்பின் தரம் தொடர்பிலும் புனரமைப்பின்போது பின்பற்றப்படுகின்ற நடைமுறை தொடர்பிலும் பொதுமக்களால் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அதனையடுத்து குறித்த வீதி வேலைகள் சாவகச்சேரி நகர உப தவிசாளர் ஞா.கிஷோரின் உத்தரவுக்கமைய தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த வீதி புனரமைப்புத் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் குறித்த வீதிப்பகுதிக்குச் சென்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி மக்களின் கோரிக்கைகளுக்கு அமைய குழு அமைத்து அவர்களின் கண்காணிப்புடனும் வேலைகளை முன்னெடுத்தல் மற்றும் வேலைத்திட்ட பெயர்பலகை வைப்பதற்கும் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர். (ச-28)

## கிண்ணியா நகரசபை ஐ.ம.சக்தியின் வசம்

கொழும்பு, ஜூன் 19

கிண்ணியா நகரசபையின் தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் எம். எம். மஹ்தி வெற்றிபெற்றுள்ளார்.

கிண்ணியா நகரசபையின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும் தலைமைதாங்கும் அதிகாரியுமான அஸ்மி ஆதம்லெப்பை தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது, கிண்ணியா நகரசபையின் தவிசாளர் தெரிவிக்காக இடம்பெற்ற, பகிரங்க வாக்களிப்பில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட தவிசாளர் வேட்பாளர் எம். எம். மஹ்தி வெற்றி பெற்றுள்ளார்.

15 உறுப்பினர்களைக்கொண்ட கிண்ணியா நகரசபையில், 9 வாக்குகளை எம்.எம். மஹ்தி பெற்றுக்கொண்டதோடு, தேசிய மக்கள் சக்தியின் சார்பில், தவிசாளருக்காகப் போட்டியிட்ட, அஷ்ரப் இம்ரான் 2 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

தவிசாளர் தெரிவின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் 4 உறுப்பினர்களும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 4 உறுப்பினர்களும், பொதுசன ஐக்கிய முன்னணியின் ஒரு உறுப்பினரும் எம்.எம். மஹ்திக்கு ஆதரவாக வாக்களித்தனர். உதவி தவிசாளராக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எஸ். அப்துல் அசீஸ் போட்டியின்றி ஏகமான தாகத் தெரிவுசெய்யப்பட்டார். (ச-இ)




**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**வீடு வாடகைக்குத் தேவை**

கல்வியங்காடு, கச்சேரி, அரியாலை, கொழும்புத்துறை பகுதியில் 2-4 அறைகளுடன் கூடிய தனிவீடு இணைக்கப்பட்ட குளியலறையுடன் தேவை.

தொடர்புகளுக்கு: 077 728 4196

**புதிய கட்டடம் விற்பனைக்கு உண்டு**

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள 55 அடி நீளம், 44 அடி அகலம் கொண்ட புதிய கட்டட அடித்தளம், முதல்மாடி, இரண்டாம் மாடி வசிக்கக்கூடியது விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app - +33 783 458510
தொலைபேசி இல - 077 675 7249

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org